இறுதி வடிவம் பெறப்பட்டிருக்கிறது என்பதையும் அதனுடைய திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறதா என்பதையும், அதனுடைய மதிப்பு என்ன என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது பற்றித் தனியாக வினா போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

581—(* வினா எண் 11869) திரு. எம். சிவக்குமார் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த தெங்குமாறடாவை சுற்றுலா மையமாக்க திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

(முற்பகல் 10-40)

திரு. எம். சிவக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது 'இல்லை' என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டார்கள். இருப்பினும் அந்தப் பகுதி இயற்கை எழில் மிக்க ஒரு பகுதியாக இருக்கின்றது. அங்கு சுற்றுலாப் பயணிகள் போய்க்கொண்டுதான் இருக்கின்றார்கள். அங்கே போகின்ற ரோட்டினுடைய இரு மருங்கிலும் மயில்கள், மான் கூட்டங்கள், வண்ணவண்ணப் பறவைகள் போன்ற பலவகைப் பறவைகள் இருக்கின்றன. அது இயற்கை எழில் மிக்க பகுதியாக இருக்கின்றது. சுற்றுலாப் பயணிகள் கண்டு களிக்கின்ற இடமாக இருக்கின்றது. அதை ஒரு சுற்றுலா மையம் ஆக்க அரசு முயலுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கல்லட்டி நீர்வீழ்ச்சியும் கோடநாடு காட்சி முனையும் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன. கல்லட்டி நீர்வீழ்ச்சியில் சுமார் 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பலவகையான வசதிகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கோடநாடு

காட்சி முனையில் சுமார் ரூ. 8 லட்சம் மதிப்பீட்டில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல முன்னேற்றமான பணிகள் செய்வதற்குத் திட்டம் இடப்பட்டிருக்கிறது. அங்கே கோடநாடு காட்சி முனையிலிருந்து தெங்குமாஹடா இடத்திற்கு 'ட்ரெக்கிங் ரூட்' மலைவழித் தடம் உள்ளது. அதை அபிவிருத்தி செய்து தெங்கு மாஹடாவில் வந்து பயணிகள் தங்குவதற்கு இடங்கள் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். சிவக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது கோட நாடு காட்சி முனைப் பகுதியைச் சுற்றுலா மையம் ஆக்குவதற்குள்ள வேறு நடவடிக்கைகளைப் பற்றிக் கூறினார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கேயிருந்து கோடநாடு காட்சி முனை வழியாக தெங்குமாஹடாவிற்குப் போகும் வழி சிறிய வழிப் பாதையாக இருக்கின்ற காரணத்தினால் அங்கேயுள்ள வழிப்பாதையைச் சீரமைப்பதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதைப் பற்றியும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கோடநாடு காட்சி முனைப் பகுதிக்கு உதகை கோத்தகிரி வழியாகத்தான் செல்ல வேண்டும். தெங்குமாஹடா பகுதியிலிருந்து அந்தப் பகுதிக்கு வழித்தடங்களை ஏற்படுத்த வேண்டும். கோடநாடு காட்சி முனைப் பகுதிக்குப் பக்கத்திலே ரங்கசாமி மலை அற்புதமான மலை. பார்வைக்கு மிக உகந்ததாக இருக்கும். ஆகவே அந்த பகுதியில் அரசு வழித்தடங்களை ஏற்படுத்த வேண்டும். கல்லட்டி நீர்வீழ்ச்சியை அழகுபடுத்தும் போது, அதன் மெயின் சாலையிலிருந்து இறங்கிப் போவதற்கு மிகவும் மோசமானதாக இருப்பதால், தகுந்த வழிப்பாதைகளை அமைக்க அரசு முயலுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லட்டி நீர்வீழ்ச்சியை மேம்பாடு செய்கின்றபோது நிச்சயமாக போகின்ற வழித்தடம் மேம்பாடு செய்யப்படும். அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோடநாடு காட்சிமுனைப் பற்றியும் அதன் வேறு பக்கத்திலே இருக்கின்ற மலையைச் சேர்க்கலாம் என்று சொன்னார்கள். அந்த மலையைச் சேர்த்து இந்தத் திட்டத்தில் மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி இந்திரா காந்தி திருவுருவச் சிலை

582—(*வினா எண் 12154) திரு. சைதை சா. துரைசாமி மற்றும் திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் திரு உருவச் சிலையினை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் அந்தச் சிலை நிறுவப்பட இருக்கிறது என்பதையும், அந்தச் சிலை எப்போது திறக்கப்படும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய பெருமதிப்புக்கும், நன்றிக்கும் உரித்தான காலம் சென்ற பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய திருவுருவச் சிலையினை தலைநகரின் முக்கியமான இடத்தில் வைக்க வேண்டுமென்ற குறிப்பு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. எந்த இடம், எப்படிப்பட்ட உருவம் என்பதை அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.